# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஐப்பசி 19
ஜுல்ஹஜ் பிறை 3
ஞாயிறு (5-11-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 45

விலை சதம் 60


# தமிழர் விரோதியே திரும்பிப் போ!




## தமிழ் நாட்டில் ஜே. ஆருக்கு எதிர்ப்பு!

இனக்கொலை, இன ஒழிப்பு ஆட்சிநடத்தும் சிறீலங்காவின் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு அண்மையில் சென்னை விமானநிலையத்தில் பலத்தஎதிர்ப்புக்காட்டப்பட்டது. "ஈழத் தமிழர் விரோதியே திரும்பிப்போ" என்று கூறும் துண்டுப் பிரசுரங்கள் சென்னை விமானநிலையத்தில் திரு. ஜே. ஆர். சென்று இறங்கிய தருணம் பல்லாயிரக்கணக்கில் வீசப்பட்டன. இதையொட்டி இனஒதுக்கல் எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த சேலம் பாவரசு தமிழ்நாடு அரசு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

தற்போது இந்தியச் செலவு மேற்கொண்டுள்ள சிறீலங்கா ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 26-10-78 வியாழக்கிழமை மாலை சென்னை விமானநிலையத்தில் சென்று இறங்கியபோதே இந்த எதிர்பாராத சம்பவம் இடம்பெற்றது.

ஈழத்தில் தமிழினத்தை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிங்கள ஆட்சியின் தலைவருக்கு தமிழ் நாட்டின் நாலரைக் கோடி தமிழ்மக்களின் எதிர்ப்புணர்ச்சியை வெளிக்காட்டும் விதத்தில் "ஈழத்தமிழர் விரோதியே திரும்பிப்போ" என்றுகூறும் துண்டுப்பிரசுரங்களை இனஒதுக்கல் எதிர்ப்பு இயக்கத்தினர் பல்லாயிரக்கணக்கில் விமானநிலையத்தில் வீசினர். இதனால் விமானநிலையத்தில் சிறிது பரபரப்பு ஏற்பட்டிருந்தது. இந்த இயக்கத்தைச் சேர்ந்த சேலம் பாவரசு உடனடியாககாவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

திரு. ஜே. ஆர். செலவை

—4-ம் பக்கம் பார்க்க

## தொலைக்காட்சிவசதி அமிருக்கும் கிடைக்குமா?

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி வானொலியும், தொலைக்காட்சியும் யாவருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கும் என்பது இந்திய அரசான ஜனதாஆட்சியின்கொள்கை

அந்த அடிப்படையில் சிறீலங்காவின் ஆளுங்கட்சி ஜனதிபதியான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தொலைக்காட்சியில்தோன்றி பேட்டியளிப்பதற்கு டெல்லியில் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது.

ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை கொண்டுள்ள ஜனதாஅரசு, அதேதொலைக்காட்சி வசதியை டெல்லி செல்லும் சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரான திரு. அமிர்தலிங்கத்துக்கும் அளிக்கும் என்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்—

## தமிழ்த் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்துவீர்களா?

### ஜே.ஆரிடம் தொலைக்காட்சியில் கேள்வி

இலங்கையில்தனிநாடு கோரிப் போராடும் தமிழ்த் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவீர்களா? என்று சிறீலங்கா ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் புதுடெல்லி தொலைக்காட்சி நிருபர் கேள்விக்கணை தொடுத்துள்ளார்.

தொலைக்காட்சி நிருபருக்கு திரு. ஜே. ஆர். அளித்த செவ்வியின் போது இலங்கையில் தீவிரவாத தமிழ் இயக்கம் பற்றி குறிப்பிட்டபோதே இந்தக்கேள்வியெழுப்பப்பட்டது.

திரு. ஜெயவர்த்தனஅங்கு கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:-

"தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள் சிலர் எம்மோடு ஒத்துழைக்க உள்ளூர விரும்பினாலும் கூட, அவர்கள் தமிழ்த் தீவிரவாதக் குழு ஒன்றுக்கு பெரிதும் பயப்படுகிறார்கள். இந்தத் தீவிரவாதக் குழுவினர் சுட்டுக் கொல்லுவோம் என்று பயமுறுத்தியதுமட்டுமன்றி— எங்களுடன் இணைந்த ஒரு கூட்டணி உறுப்பினரை கொழும்பு நகரின் மத்திய இடமொன்றில் வைத்துச் சுட்டும் விட்டார்கள். அவர்சாவிலிருந்து ஒருவாறு தப்பி விட்டார். எங்களுடன் அவர்கள் சேர்வது அவர்கள் தீர்மானிக்க வேண்டிய விடயமே.

நிருபர் கேள்வி:- இந்தத் தமிழ்த் தீவிரவாதக் குழுவின் பேச்சாளர் ஒருவர், எந்த விதத்திலும் தங்கள் பிரதிநிதிகள் எவரையும் அரசாங்கத்துடன் சேருவதற்கு இனி அனுமதிக்கப் போவதில்லையென்று கூறியதாக கொழும்புப் பத்திரிகையொன்றில் நானும் பார்த்தேன். இந்தத் தீவிரவாதிகளுடன் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நீங்கள்முயற்சியெடுக்கிறீர்களா?

ஜே. ஆர். :- அது அவர்களைப் பொறுத்தது.

திருபர்:- ஆனால், நீங்கள் உங்கள் அளவில் ஏதாவது......?

—4-ம் பக்கம் பார்க்க

## சிங்களக் குடியேற்றம் பரந்தன்வரை வருகிறது

பொலிஸ், இராணுவப் பாதுகாப்புடன் துப்பாக்கி முனையில் தமிழ்ஈழத்தில் புதிய சிங்களக் குடியேறறங்களை சிறீலங்கா அரசு திணிக்கவிருக்கிறது. அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பிக்கப்படும் புதிய சிங்களக் குடியேற்றங்கள். கிழக்கே திருகோணமலைவரையும்,வடக்கே பரந்தன் பறங்கியாறுவரை விஸ்தரிக்கப்படவிருக்கின்றன. இச் சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பு பொலிஸ் மா அதிபர் அனசெனிவிரத்தினவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதகுடியேற்றங்கள் இஸ்ரேல் அரசினல் நடத்தப்படுகின்றன; இங்கோ தமிழ் ஈழப்பிரதேசம் சிங்களவர்களால் கைப்பற்றப்படாமலே, சட்ட விரோதமாக சிங்களக் குடியேற்றங்களை சிங்கள அரசு நடத்த முற்பட்டுள்ளது.

## இந்த இதழில்..!

"புதிய அரசியல் சட்டமும் தமிழ் தேசிய வாதமும்"
—கலாநிதி வில்சன் பேருரை முழுவதும் இடம் பெற்றுள்ளது.

## அடுத்த இதழில்..!

- சர்வதேச அரங்கில் தமிழ் ஈழக் குரல் எழுப்பிய வைகுந்தவாசன் ஐ. நா. சபைக்குள் எவ்வாறு புகுந்தார்?

## தமிழ்நாடு குலுங்க தலைவர் அமிருக்கு வரவேற்பு ஏற்பாடு தயார்!

இந்தவார இறுதியில் தமிழ் நாட்டுக்கு வருவாரென எதிர்பார்க்கப்படும் தமிழீழ விடுதலைப்படையின் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு தமிழ்நாடு குலுங்கும் படி மிகப் பெரிய வரவேற்புக்கள் அளிக்கப்பட இருக்கின்றன. சென்னையில் மட்டுமன்றி தமிழ் நாட்டின் பல்

—8-ம் பக்கம் பார்க்க

## இனவாத சிறீலங்காவுக்கு உலக அரங்கில் பேரிடி!

சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிக்கான தேர்தலில் சிங்கள இனவாத சிறீலங்காவின் சார்பில் போட்டியிட்ட சிறீலங்கா ஜனதிபதியின் சகோதரர் திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன தோற்கடிக்கப்பட்டுள்ளார். தமிழ் ஈழ மக்களுக்கு எதிராக சிறீலங்கா கடைப்பிடித்துவரும் இனவாதக் கொள்கை உலக அரங்கில் அம்பலத்துக்கு வந்துவிட்டதன் எதிரொலியாகவே திரு. ஜெயவர்த்தன தோற்கடிக்கப்பட்டதாக சர்வதேச வட்டாரங்களில் கருதப்படுகிறது. இது சிறீலங்கா அரசுக்கும் ஜே. ஆருக்கும் உலக அரங்கில் விழுந்த ஒரு பேரிடியாகும்.

அண்மையில் திரு. அமிர்தலிங்கம் இலங்கை அரசுக்கு எதிராக மேற்கு நாடுகளில் மேற்கொண்ட தீவிர பிரசாரமும், ஐ. நா. சபையில் திரு. வைகுந்தவாசன் ஏற்படுத்திய அதிர்ச்சியுமே இத்தகைய பிரதிபலிப்புக்கு காரணம் என்று ஊகிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுடன்சேர்ந்த கூட்டணி எம்.பி.மீதுதுப்பாக்கிச்சூடு!

# ஒத்துழைக்க சிலர் அஞ்சுவதற்கு இதுவேகாரணம்'

# டெல்லிப் பத்திரிகையாளர்களுக்கு ஜே.ஆர்., செவ்வி!

டெல்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இலங்கைத்தமிழர் பிரச்சினை பற்றிக் கேட்கப்பட்டபோது சிறீலங்காவின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியதாவது:-

''ஏறத்தாழ 40 ஆண்டு காலமாக தமிழர் பிரச்சினை இருந்துகொண்டு வருகிறது. அப்பிரச்சினைகளை ஒரே இரவில் தீர்த்துவிடமுடியாது.

''எதிர்காலத்தில் பிரச்சினைகள் இருக்கும் என்று நான் கருதவில்லை. நம்பிக்கையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் தன்மையுமே தேவை. சிறீலங்காவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் நான் நேசக்கரம் நீட்டியுள்ளேன், எனக்குநிற இன, மத, சாதி பேதம் எதுவும் யார் மீதும் கிடையாது. இந்த உணர்வு என்னிடம் இருந்தது—இன்றும் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நாட்டின் தலைவர்மீது விசுவாசம் வைக்கப்படவேண்டும்,

''சில தீவிரவாதிகள் நியாயத்துக்குக் காதுகொடுப்பதில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் அரசாங்கத்துடன் சேர்ந்தபோது அவர் சுடப்பட்டார். அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கு சிலர் பயப்படுவதற்கு இதுதான் காரணம். கூட்டணியின் எந்த உறுப்பினரையும் அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேன்,

தமிழர்களின் தனிநாடு கோரிக்கை எழுவதற்கான காரணங்கள் நியாயமானதாகவும் தூய்மையானதாகவும் காணப்படுவதை நாம் உணர்ந்ததால்தான் பொதுத்தேர்தலுக்கு முன் எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இப்பிரச்சினைகளைத்தீர்ப்போம்என்று கூறியிருந்தோம் அதை நாங்கள் செய்துவிட்டோம்!''

இவ்வாறு திரு. ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

ஆதாரம்; சன். (30.10.78)

## செய்தியும் விமர்சனமும்

### பாவம் காந்திஜி!

''காந்திஜி கொள்கையையே நான் பின்பற்றுகிறேன்-''

—டெல்லியில் ஜே. ஆர்.

—இந்து— முஸ்லிம் கலவரத்தின்போது சிறுபான்மையினரான முஸ்லிம்களைப் பார்த்து ''போர் என்றால் போர்— சமாதானம் என்றால்சமாதானம்'' என்று காந்திஜி பயமுறுத்தியதாக அவரது வரலாற்றில் எங்குமே காணப்படவில்லையே!

★

### சபாஷ் ஜே. ஆர்!

வவுனியா விமானத் தளத்தை நீதிமந்திரி தேவநாயகம் திறந்துவைத்தார்.

—செய்தி

—தமிழனை அடக்குவதற்காக நிறுவப்பட்டுள்ள விமானத்தளத்தை தமிழனைக் கொண்டே திறக்க வைத்த ஜே. ஆரின் சாணக்கியத்திற்கு ஒரு சபாஷ்!

★

### உலகுக்கு ஒன்று....

தமிபியாவின் சுயநிர்ணய உரிமையில் தலையிடும் தென்னாபிரிக்காவை சிறீலங்கா பிரதிநிதி ஐ. நா. சபையில் கடுமையாகக் கண்டித்தார்.

—செய்தி

— தமிழீழத்தின் சுயநிர்ணய உரிமையில் தலையிட்டு இராணுவ பலத்தால், அதை மறுக்கும்சிறீலங்கா ஏகாதிபத்தியத்தை யார் கண்டிப்பது?

★

### அமிர்— ஜே. ஆர். மோதல்....

யாராவது யுத்தம் புரிய வேண்டுமென்றால் மக்களைப் பலியிடாது, எல்லாளனும், துட்டகைமுனுவும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டது போல, சண்டையிட்டுக் கொள்ளட்டும்!

—டெல்லியில் ஜே. ஆர்.

—அப்படியென்றால் இலங்கையில் தமிழர்களையும் சிங்களவர்களையும் யுத்தத்தில் பலியிடாது, தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்தை தம்முடன் மல்யுத்தத்துக்கு அழைக்கிறாரோ சிங்கள மக்களின் தலைவர் ஜே. ஆர். என்று கேட்கிறான் ஆபீஸ் பையன்.

★

### அபிவிருத்தி இதுதான்

''எங்கள் அரசாங்கம் ஒற்றையாட்சி அரசாகும். நாட்டைக் கூறுபோட ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்!''

—மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திமாநாட்டில்பிரதமர் பிரேமதாச.

—இதுதான் மட்டக்களப்பை அபிவிருத்தி செய்ய பிரேமதாச முன்வைக்கும் திட்டமா? அபிவிருத்தி மாநாட்டில் அரசியலா? என்கிறான் மட்டக்களப்பு இளைஞன்.

★

### இது ஜனநாயகமா

''தமிழ் ஈழம் வேண்டுமென்று யாராவது விரும்பினால் அவர்கள் ஜனநாயக வழியில் அதை நாடட்டும்''

—பிரதமர் பிரேமதாச.

—அப்படியானல் ஜனநாயகமற்ற வழிகளில் தமது தாயகத்தின் சுதந்திரத்துக்கு போராடும் பாலஸ்தீனர்களுக்கு மட்டும் பிரேமதாசாவின் 'ஜனநாயக அரசு' எப்படி ஆதரவு வழங்குகிறது என்று புரியவில்லையே என்று கேட்கிறான் ஒரு தீவிரவாத தமிழ் இளைஞன்.

★

### நன்றி

ஒரிஸ்ஸாவிலிருந்து வந்த விஜயன் இலங்கையில் சிங்கள இனத்தைத் தோற்றுவித்தான்.

—ஜே. ஆர். (சஞ்சீவரெட்டி அளித்த விருந்தில்)

—சிங்களவர்கள் இலங்கையின் வந்தேறு குடிகள் என்பதை இப்படிப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

'ஜோர்தான் நதியின் மேற்குக் கரையில் — கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் யூதக் குடியேற்றங்களைத் திரும்பத் திரும்பக் கண்டிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் தமிழ் ஈழத்தில் மேற்கொள்ளப் போவதாக சிங்கள சிறீலங்காவால் அறிவிக்கப்பட்டுள்ள சிங்கள குடியேற்றங்களையும் கண்டிக்க முற்படுவாரா? அரபுப் பிரதேசங்களில் இடம்பெறும் யூதக் குடியேற்றங்கள் கண்டிக்கப்பட வேண்டியதே! அதே போன்று தமிழ்ப் பிரதேசங்களில் தமிழரை இனவொழிப்புக்கு உள்ளாக்கும் வகையில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் பாரிய சிங்களக்குடியேற்றங்களும் ஜிம்மிக் காட்டர் போன்ற உலக ராஜாங்கத் தலைவர்களது கண்டனத்துக்கு உள்ளாக வேண்டும். இந்த வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நியுயோர்க்கில் வைத்து பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்ட தகவல்கள் நம்பிக்கையளிப்பதாக உள்ளது.''

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கில் ''பண்டு தொட்டு இன்று மட்டும் இனக்கொலை தொடர்கிறது இலங்கையில்'' என்ற தலைப்பில் உரையாற்றிய டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய அவர் தமது பேச்சில் கூறியதாவது:

இலங்கைத் தீவின் பூர்வ குடிகளான இயக்கர், நாகர் இனமழிந்தமை வரலாறு. வேடுவர் சமூகம் இனஅழி[illegible] இல்லமதானும் அற்ற நிலையில் அல்லலுறுகின்றது. ஆதியில் புத்தளம், அனுராதபுரம், பொலன்நறுவை போன்ற பகுதிகளில் செறிந்து வாழ்ந்த தமிழ்க் குலம் பௌத்த மதத்தை தழுவியதால் காலப் போக்கில் சிங்கள இனத்துடன் இரண்டறக் கலந்து விட்டது. மத மாற்றத்தால் தமது தனித்தன்மையை இவர்கள் இழந்தது போன்று, போதனை மொழி மாற்றத்தால் சிலாபம், நீர்கொழும்புப் பிரதேசங்களில் வாழ்ந்த கத்தோலிக்கத் தமிழ் மக்கள் தமது தனித்துவத்தை இழந்து இன்று மூன்று சந்ததி காலத்துக்குள் சிங்களவர்களாகவே மாறி விட்டனர்.

தனிச் சிங்கள சட்டம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வம்சாவழியினரான பறங்கியர் சமூகத்துக்கு அரசாங்க, பொதுச் சேவைகளில் இருந்து வந்த உத்தியோக வாய்ப்புக்களுக்குக் கதவடைப்புச் செய்ததால் பறங்கியர் சமூகம் அவுஸ்திரேலியாவுக்கும் ஏனைய மேற்கு நாடுகளுக்கும் குடிபெயர்ந்தது அண்மைக்கால நிகழ்ச்சியாகும்.

பறங்கியர் புலப்பெயர்வு இலங்கை சம்பந்தப்பட்ட மட்டில் இனவொழிப்பேயன்றி வேறல்ல! சிங்களம் மட்டும் சட்டம் தமிழர்களை அரசாங்க பொதுச் சேவைகளில் இருந்தும் நீதிமன்றங்களில் இருந்தும் விரட்டியது. பல்கலைக்கழகப் பிரவேசம் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு மறுக்கப்பட்டது,குடியுரிமை வாக்குரிமை மறுப்பு இந்திய வம்சாவழியினரை நாடற்ற இரண்டாந்தர மக்களாக மாற்றிவிட்டது. தோட்டத் தொழிலாளத் தமிழ்ப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளுக்கு மூடுவிழாத் தொடருகிறது. விருப்பின்றி சிங்களப் பாடசாலைகளுக்குச் சென்று படிக்க இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். புதிய அரசியல் திட்டமோ மாணவர் போதனை மொழியைத் தெரிவு செய்யும் உரிமையை பெற்றோருக்குத் தருகிறது. மலையகத் தமிழனை சிங்களவராக மாற்றுவதற்கான மறைமுகமான தூண்டுதலே இது. மாணவர் போதனை மொழியாக தாய்மொழி இருக்கக் கூடாது என்பதே சூழ்ச்சி.

இறுதியாக இலட்சக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் மாத்தறை காலி போன்ற சிங்களப் பிரதேசங்களுக்கு புலம்பெயரவும்,அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தமிழ் ஈழத்தில் இலட்சக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்படவும் உள்ளனர். ஜே. ஆர். அரசு அண்மையில் அறிவித்துள்ள இந்த ஆபத்தான இனவொழிப்பில் இருந்து தமிழ்க் குலம் காப்பாற்றப்பட வேண்டுமாகில் உலக அபிப்பிராயம் ஒன்றே அதற்கு உதவமுடியும். மனித உரிமைகளுக்காகப் பாடுபடும் ஜிம்மிகாட்டர் போன்றோர் அதுபற்றி கருத்து வெளியிடுதல் உதவக்கூடும். ஆகவேதான் தளபதி அமிர்தலிங்கம் வெளிநாடுகளில் மேற்கொண்டு வரும் பிரச்சாரத்துக்கு ஊறு தேடாதவாறு இங்குள்ளவர்கள் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு பேணல் அவசியமாகிறது.

## "அரபுப் பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்களை கண்டிக்கும் கார்ட்டர் தமிழீழப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை கண்டிப்பாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொழும்புக்கிளையின் சார்பில் ஒரு கருத்தரங்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்றது. கருத்தரங்கில் கனேடிய ''நியூ ப்ரன்ஸ்விக்'' பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ஏ. ஜே. வில்சன் அவர்கள் கலந்துகொண்டு ''1978ம் ஆண்டு அரசியல் யாப்பும் தமிழ்த் தேசிய வாதமும்'' என்ற தலையங்கத்தில் உரையாற்றினார். மேற்படி கருத்தரங்கிற்குப் பேராசிரியர் ஜே. ஆர். சின்னத்தம்பி அவர்கள் தலைமை தாங்கினார். கலாநிதி ஏ. ஜே. வில்சன் அவர்கள் நிகழ்த்திய உரை இங்கு இடம்பெற்றுள்ளது.

# சிங்களவர்கள் உருவாக்கிய அரசியலமைப்பு தமிழர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது!

## தமிழினத்தின் மத்தியில் மூண்டெழுந்துள்ள தமிழ் தேசிய உணர்வை இனி அழிக்கமுடியாது

''நான் 1974ம் ஆண்டு இலங்கையின் அரசியல் நிலைமை பற்றி ஆராய்ந்து ஒரு நூலை வெளியிட்டேன். அதன்பின்னர் இற்றைவரையிலான காலப் பகுதியில் பல மாற்றங்கள் அரசியலில் ஏற்பட்டு இருக்கின்றன. இதுபற்றிப் பக்கச் சார்பின்றி ஆராய்தல் அவசியமாகும். கனடாவில் இரண்டு தேசிய இனங்கள் வாழ்கின்றன. ஆங்கிலேயர்கள் பிரான்சியர்களுக்கு எவ்வளவுதான் சலுகைகளைக் காட்டினாலும் அவர்கள் தமது அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை. பிரான்சியர் கனடாவில் தமது உரிமைகளுக்கு விட்டுக் கொடுக்காது போராடுவது போன்றதொரு நிலைதான் இலங்கையிலும் காணப்படுகின்றது.

### தமிழினம் விட்டுக் கொடுக்காது

தனிப்பண்பாடுள்ள இனம் திட்டவட்டமான எல்லைப் பரப்புக்குள் வாழும் இனம் தனது உரிமைகளை விட்டுக் கொடுக்காது. இதற்கு தமிழினமும் விதிவிலக்காக இருக்க முடியாது. இலங்கைத் தமிழினத்திடம் விட்டுக் கொடுக்கும் தன்மையில்லை. சில கத்தோலிக்கரும் முஸ்லீம்களும் இரண்டாம் தர நிலையை ஏற்கத் தயாராக விரும்பினும் தமிழினமோ அந்த நிலையை ஏற்க தயாரில்லை.

ஆரம்பகாலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ் சேர்ந்துகொண்டது. அவர்கள் மலையக மக்களின் வாக்குரிமையை ஐ. தே. கட்சி பறிப்பதை யிட்டு எதிர்ப்புத் தெரிவிக்காதபடியால் தமிழரசுக் கட்சி தோன்றியது. 1951ல் ஸ்ரீ. ல. சு. கட்சி ஐக்கிய தேசியக்கட்சியுடன் முரண்பட்டு வெளியேறியது. 1956ல் இக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சிங்கள மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றத் தோன்றியது போல தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்ற தமிழரசுக்கட்சி தோன்றியது. இரு பகுதியினரும் உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

### சிங்கள தேசியவாதத்தின் பிரதிபலிப்பு

1972ம் ஆண்டு அரசியலமைப்பிலும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பிலும் சிங்கள தேசிய உணர்வுக்கு முழுவடிவம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு சிங்களத் தேசிய உணர்வுக்கு முழுவடிவம் கொடுத்துக் கொண்டு தமிழ் மக்களது உணர்வுகளுக்குரிய இடம் கொடுக்கப்படுமெனக் காட்டப்படும் பாசாங்குகள், தமிழரது எண்ணத்தை மாற்றுவதாகவும் பிரிந்து சென்று தாம் தனியே வாழ வேண்டும் என்ற எண்ணத்தை தமிழ்மக்களிடம் வலுவாக்கிவிட்டனவாகவும் உள்ளன. இந்த இரண்டு அரசியலமைப்பும் சிங்கள தேசிய வாதத்தைப் பிரதிபலிப்பனவாகத்தான் காணப்படுகின்றன.

### மூன்றுவகைக் கருத்துக்கள்

1910ம் ஆண்டு படித்தவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டதையடுத்து சேர். பொன்னம்பலம் இராமநாதன், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் தமிழ்பேசுமினத்திற்கு தலைமை தாங்கிய கால கட்டத்திலும் 1957ம் ஆண்டு பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் தமிழ்த்தலைவர்களது கருத்துக்களை ஏற்கும் மனப்பாங்கு சிங்களத்தலைவர்களிடம் காணப்பட்டது. இப்போது அத்தகையமனப்பாங்கு காணப்படுவதில்லை. 1958ம் ஆண்டும் 1977ம் ஆண்டும் ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்து அரசியல் பிரச்சினையை விடத் தமிழ்மக்களுக்கு நாட்டில் வாழுவதற்குப் போதிய பாதுகாப்பில்லையே என்ற கருத்து மேலோங்கி விட்டது. 1960ம் ஆண்டுக்குப்பின்பு பின்வரும் மூன்று வகையான கருத்துக்கள் தமிழ்மக்கள் மத்தியில் நிலைத்துவிட்டது.

முதலாவது,— தமிழ் மக்களுக்குரிய தனித்துவமான வாழ்க்கை முறையைப்பாதுகாத்தல்.

இரண்டாவது,— தமது மரபு வழித்தாயகத்தைப் பாதுகாத்து முன்னேற்றுதல்.

மூன்றாவது,— தமது தாயகத்தில் வாழுவதற்குரிய உரிமையைத்தொடர்ந்து விடாப்பிடியாகப் பாதுகாத்தல்.

இந்த மூன்று நிலையும் சிங்கள வெறியர் தமிழர்களை அடக்கியாள முற்பட்டமையால்தான் ஏற்பட்டது.

### ஆங்கிலேயர் கருத்து

1911ம் ஆண்டு இலங்கைத் தமிழர்களைப்பற்றி ''டென்காம்'' என்ற ஆங்கிலேயர் பின்வருமாறு எழுதினார்:

'' 'யாழ்ப்பாணத் தமிழர்கள் தமது பாரம்பரிய தாயகத்திற்கு வெளியே பரந்து வாழ்ந்தாலும் அவர்களுக்கு அப்பகுதிகளில் தொடர்ந்தும் வாழ வேண்டும் என்ற கருத்து இல்லை. வடபகுதிக்கே மீண்டும் திரும்பிச் சென்றுவிட வேண்டும் என்ற கருத்தே காணப்படுகின்றது. இதை நான் தொடர்ந்து செய்தவொரு ஆய்வின் பலனாக தமிழ் மக்களது மனப்பாங்கு இவ்வாறு ஓங்கி வளர்ந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.''

எப்படித்தான் தமிழர்களது இன உணர்வை அழிப்பதற்கு சிங்கள அரசாங்கம் முற்பட்டாலும் தமது தாயகத்தில் தான் வாழ வேண்டும் என்ற தமிழ்த் தேசிய வாதத்தை யாராலும் தடுக்கவோ அழிக்கவோ முடியாது.

இத்தகைய தேசிய உணர்வு உச்சக்கட்டத்தில் காணப்படினும் பிரிவினை நிலையிலும்— வேற்றுமையிலும் ஒரு ஒற்றுமை ஏற்படுத்தலாம் என்பது எனது கருத்தாகும். ஆனால் எந்த நிலையிலும் 1956ம் ஆண்டுக்கு முன்பு இருந்த நிலை ஏற்படாது. இலங்கையின் அரசாங்கங்கள் உலகின் அரசியலமைப்புகளை மனதில் கொண்டு செய்தால் தேசிய வாத உணர்வை ஓரளவு தடுக்கலாம்.

### ஒட்டுவேலை உதவாது

தற்போதைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஆங்கிலத்திற்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுத்தும் இது வரையில்லாதளவுக்கு தமிழ் மொழிக்குச் சில சலுகைகளைக் கொடுக்க முயன்றுள்ளபோதும் சிங்கள தேசியவாதத் தீயானது எங்கணும் வியாபித்துள்ளபடியால் இதை எந்தத் தீயணைப்புப்படையாலும் அணைக்கமுடியாது.

சிங்கள— தமிழ் இன உணர்வுப் போக்குகளையும் அவற்றின் அடிப்படையிலான வெறுப்புணர்ச்சிகளையும் இனிமேல் எதுவிதத்திலும் தீர்க்க முடியாது. சில ஒட்டு வேலைகளைச் செய்யலாம். ஆனால் அவை எவையும் தமிழர்களது அபிலாஷைகளையோ இலட்சியங்களையோ தேவைகளையோ எந்தவகையிலும் நிறைவு செய்யப்போவதில்லை.

### வீதாசாரப் பிரதிநிதித்துவம்

விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையாலும் ஜனாதிபதித் தேர்தலாலும் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் தமிழருக்கு நன்மைபோல் காணப்படினும் நடைமுறையில் இவை நன்மையாக இருக்கப்போவதில்லை. தமிழ் மொழிக்குச் சமத்துவம் கோரி தமிழ்த் தலைவர்கள் போராடிய வேளையில் தானும் தமிழ்த் தலைவர்கள் அவை தமிழர்களுக்கு நிலையான பாதுகாப்பாக இருக்கும் என்று கருதவில்லை. இப்போது நிலையான பாதுகாப்பில்லை என்பது வெள்ளிடைமலையான பின்பு புதிய அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அற்ப சொற்ப சலுகைகள் எமக்குப் பாதுகாப்பானது என்ற கருத்தை நாம் ஏற்கும் நிலையில் இல்லை.

1972ம் ஆண்டு அரசியலமைப்பும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பும் தமிழ்த் தலைவர்களது கருத்துக்களை செவிமடுக்காது சிங்களத்தலைவர்களது இச்சைப்படி நிறைவேற்றப் பட்டுள்ளபடியால் அவை தமிழ் மக்களை எந்தவகையிலும் கட்டுப் படுத்தாது.

### 29வது விதி

1947, 1948ம் ஆண்டுக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பானது சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்ட மோதல்களைக்கண்டு இரு சாராரிடமும் சமரசம் காணுமுகமாக ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டது. இதனால்அந்தஅரசியலமைப்பில் காணப்பட்ட 29ம்பிரிவு தமிழ் மக்களுக்கு ஓரளவு பாதுகாப்பானதாகக் காணப்பட்டது. ஆனால் 1972, 1978ம் ஆண்டு அரசியலமைப்புக்களோ இத்தகைய ஓரளவு பாதுகாப்புகளைத்தானும் மறுக்கும் நிலையில்தான் உருவாக்கப் பட்டன.

1948ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பில் காணப்பட்ட இந்த 29ம் பிரிவுக்கு முரணாக 1956ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் காணப்படுவதாகவும் இச் சட்டம் கொண்டுவரப்பட முன்பு அரசாங்க சேவையில் சேர்ந்த தம்மை இச்சட்டம் கட்டுப்படுத்தாது என்றும் தமது ஊதிய உயர்வை மறுப்பது நியாயமற்றது என்றும் கூறி கோடீஸ்வரன் என்ற அரசாங்க ஊழியர் கேகாலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த மாவட்ட நீதி மன்றம் கோடீஸ்வரனின் வாதங்களை ஏற்றுக்கொண்டு அவருக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அரசாங்கம் இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குமேன் முறையீடு செய்தபோது உயர்நீதி மன்றம் அரசாங்கத்துக்குச்சார்பாகத்தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்துப் பிரிவுக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டபோது பிரிவுக்கவுன்சில் 1948 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 29ம் விதிபற்றி எதுவும் கூறாமல் கோடீஸ்வரனின் வழக்கில் காணப்பட்ட நியாயங்களை மட்டும் எடுத்து வலியுறுத்தியது.

### புறக்கணிப்பும் பாசாங்கும்

அரசியலமைப்புச் சட்டங்கள் மாற்றியமைக்கப்படும் போது பல்வேறு குடிமக்களதும் கருத்துக்களைக் கேட்டு தெரிந்து கொண்டதன் பின்னர் தான் உருவாக்கப் படுகின்றது. அப்படித்தான் உருவாக்கப்பட வேண்டும். இந்த மரபு வழிக்கோட்பாட்டை 1972ம் ஆண்டு அரசியல் அமைப்பை உருவாக்கியோர் முற்றாகப்புறக் கணித்தனர். 1978ம்ஆண்டு அரசியலமைப்பை உருவாக்கியோர் மக்கள் கருத்தைக் கேட்பதாகப்பாசாங்குகாட்டியபோதும் தமிழ்மக்களது அபிலாஷைகளை மதிக்கவில்லை.

விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் குடியரசுத் தலைவர் தெரிவு முறையும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பை வழங்குமென்று காட்டப்படினும் இந்த இரண்டு முறைகளும் பாதிப்பைஏற்படுத்துவனவாகவுள்ளன. இந்த விகிதாசாரப்பிரதிநிதித்துவ முறையானது கரையோரச் சிங்களவருக்கே கூடுதலான நன்மையை அளிப்பதாகவுள்ளது.

இப்போதுள்ள அரசியலமைப்பின்படி தற்போதைய அரசின் மீது சிங்களவர் வெறுப்புற்று அதை நீக்கும் முயற்சியில் ஈடுபடின் அதற்கெதிராக சிங்களப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தமது வாக்கை அளித்து ஆட்சி மாற்றத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. சிங்கள வாக்கு

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தமிழ் இளைஞர்களின் அதிர்ச்சி வைத்தியம்!

''உள்ளவழி ஒன்றேதான்; ''நம்முன்னோர் ஆண்ட மண்ணை நாமும் மீண்டும் ஆள்வோம்; தமிழ் ஈழத்தை விட்டு சிங்கள ஆட்சிபீடமே வெளியேறு'' என்று உறுதியாக, இறுதியாகக் கூறுவதே அந்த வழி; இந்தத் தேர்தலை சிங்கள ஆட்சி பீடத்துக்குத் தமிழ்த் தேசிய இனத்தின் முடிவை எடுத்துக் கூறும் ஒரு வாக்கெடுப்பாகவே தமிழர் விடுதலைக்கூட்டணி கருதுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் சிங்கள ஆட்சியிலிருந்து தமிழ் இனம் மீட்சி பெறத் தீர்மானித்து விட்டது என்பதையே காட்டும். எனவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் இத்தீவில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஓர் சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்ற தமிழ்ஈழ அரசை நிறுவுவதற்கு தமிழ்த்தேசிய இனத்தின் கட்டளையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது''

— கூட்டணி 1977 பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம் (பக்கம் 20-21)

இவ்வாறு திட்டவட்டமான தெளிவான கொள்கையை முன்வைத்து 1977 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மக்களின் அதிகாரத்தையும் ஆணையையும் பெற்றுக் கொண்ட கூட்டணி பா. உக்களில் ஒரு சிலர் அண்மைக்காலமாக கூட்டணியின் அடிப்படை இலட்சியத்துக்கு மாறுபாடான முறையில் சிங்கள யூ. என். பி. அரசுக்கு ஒத்துழைப்புப் பல்லவி பாடிவருவதும் — கூட்டணி பா. உக்கள் சிலரிடையே தோன்றியுள்ள அதிகாரமற்ற மாவட்ட மந்திரி மீதான மயக்கமும்—இவர்களது முரண்பட்ட போக்குக் குறித்து கூட்டணியின் தலைமைப் பீடம் பின்பற்றும் 'வழவழா'க்கொள்கையும் — விடுதலைப் பாதையிலிருந்து விலகி இயக்கம் வேறெங்கோ சென்று கொண்டிருக்கிறதோ என்கிற பதட்டமும்—கடந்த சில மாதங்களாக விடுதலை விரும்பிகளான தமிழ் இளைஞர்களின் உள்ளங்களை அரித்துக்கொண்டிருந்தன என்பதை நாம் அறிவோம்.

விடுதலைக்கான திட்டங்களைத் தயாரித்து, அத்திட்டங்களை செயற்படுத்துவதில் கூட்டணித் தலைமை கடைப்பிடித்துவரும் காலதாமதமும் - இதனால் விடுதலை இயக்கத்திலேற்பட்டுள்ள ஒருவகை வெறுமையும் தேக்க நிலைமையும் இளைஞர் மத்தியில் பொறுமையின்மையை தோற்றுவித்து வந்திருக்கிறது.

இளைஞர்களின் இந்த உள்ளக்கொதிப்பு இப்போது வெடித்திருக்கிறது. கூட்டணி பா. உக்கள் விடும் தவறுகளுக்கு நாமும் பங்காளிகளாக இருக்க மாட்டோம்: விடுதலைக்கு தீமை தரக்கூடிய முடிவுகளை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்; என்று தமிழ் இளைஞர் பேரவையினர் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். இளைஞர்களின் இந்தத் தீர்மானம் கூட்டணிக்கு நிச்சயம் ஓர் அதிர்ச்சி வைத்தியமாக அமையும் என்று நாம் நம்புகிறோம்.

கூட்டணியில் இளைஞர் பேரவை ஓர் உறுப்பாக இருந்து தொடர்ந்து கூட்டணித் தலைமையை ஏற்று செயற்படும் அதே வேளையில் தமிழ் இளைஞர் பேரவையைத் தனித்து இயக்குவதென்றும் இளைஞர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்:

தேர்தல், பதவி ஆசைகளுக்கும் போட்டிகளுக்கும் அப்பாற்பட்ட விடுதலை இயக்கமாக தமிழ் இளைஞர் பேரவையை வைத்துக்கொள்வதென்று பேரவையின் பொதுச்சபை செய்துள்ள தீர்மானத்தை நாம் வரவேற்கும் அதேவேளையில்— தமிழ் ஈழத்தில் சிங்கள சிறீலங்கா ஆட்சி தேர்தலையே நடத்த முடியாத அளவுக்கு மக்கள் இயக்கத்தை நூற்றுக்கு நூறு வீதம் உருவாக்கும் காலம் வரை—தேர்தலில் பங்கேற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்காகவோ, வேறு எந்த அரசியற் கட்சிக்காகவுமோ தேர்தலில் உழைப்பதில்லையென்ற இளைஞர்களின் முடிவு புத்திசாலித்தனம் நிறைந்த ஒன்றாகக் காணப்படவில்லை: இந்த முடிவு தமிழ்ப் பகைவர்களுக்கு எந்த வகையிலும் வலிவு சேர்த்துவிடக்கூடாதென்பதே நமது எச்சரிக்கையாகும். இதுகுறித்து இளைஞர் பேரவை உரிய நேரத்தில் மீள ஆராய வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

பெரியவர்கள் தமது சுயநலனுக்காகவும், சந்தர்ப்பத்துக்கேற்ற முறையிலும்—பிரதேசப் பிரிவினைக்கருத்துக்களை பெரிதுபடுத்தி அபிவிருத்தியென்ற போர்வையில் ஆட்சியாளருடன் ஒத்துழைக்க ஆசை காட்டினாலும்—இளையவர்கள் இலட்சிய வேங்கைகளாகவேயிருக்கிறார்கள் என்பதையும், பிரதேசக் கூச்சலை மீண்டும் கிளப்புவதற்கு இளைய சமுதாயம் கிஞ்சிற்றுமனுமதிக்கப் போவதில்லையென்பதையும் மட்டக்களப்பு, பட்டிருப்பு, வவுனியா, திருகோணமலை போன்ற பகுதிகளிலிருந்து வந்திருந்த இளைஞர்கள் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளனர். இந்தவகையில் கொள்கை அடிப்படையில் பிரதேச ஒற்றுமையைக்கட்டிகாக்கும் இளையவர்கள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இறுதியாக இளைஞர்களுக்கு நாம் ஒன்றே ஒன்றைக் கூறவிரும்புகிறோம்.

இன்று ஒன்றுபட்ட தமிழர் சக்தியான தமிழர் விடுதலைக்கூட்டணியை உடைத்தெறிவதில், சிங்கள வலதுசாரிகளும்சரி, சிங்கள இடதுசாரிகளும் சரி, ஒன்றுபட்டுக் கைகோத்து நிற்கின்றனர். இந்தஇன ஒற்றுமையை இந்த ஐக்கியத்தை— எப்படியும் உடைத்துவிட வேண்டுமென்பதே சிங்களவர்களின் ஒரே நோக்கமாகும்.

தெரிந்தோ, தெரியாமலோ, அவசர புத்தியினாலோ, பொறுமையின்மையாலோ— எந்தக்கட்டத்திலும் சிங்கள வலதுகளும், இடதுகளும் திட்டும் சூழ்ச்சிக்கு பலியாகி விடாதீர்கள்.

---

# கெட்டிக்கார ஜே ஆரின் புழுகு அமிர் வரும் வரைக்கும்தான்!

''தமிழர் விடுதலைக்கூட்டணியினர் விடுத்த கோரிக்கைகளையெல்லாம் கேட்டபடி அவர்களுக்கு வழங்கிவிட்டோம். தனிநாடு ஒன்றுதான் அவர்களுக்குஇன்னும் கொடுக்கவில்லை; அது அவர்களுக்கு ஒரு போதும் கிடையாது; அதைக்கொடுக்கவும் முடியாது,''

இவ்வாறு புதுடெல்லியில் தொலைக்காட்சிக்கு (டெலிவிசன்) அளித்த செவ்வியொன்றில் ஜனாதிபதி திரு, ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தார்மீகச் சாமியார்டெல்லியிலே கூறியுள்ளது எல்லாம் உண்மைதானா? விபரம் புரியாத இந்தியப் பத்திரிகை நிருபர்களை இவ்வாறு ஜனாதிபதி ஏமாற்றியிருக்கலாம். ஆயினும் கெட்டிக்கார ஜனாதிபதியின் புழுகு எட்டுநாளைக்குத்தானே. இந்தவாரம் தமிழர் தலைவர் அமிர் டெல்லிக்கு செல்லும்போது ஜே. ஆரின் பொய்க்கூற்றுக்களை அடித்து நொருக்கி, இந்திய நிருபர்களுக்கு உண்மையை முன்வைப்பார். என்று எதிர்பார்ப்போம்,

தனிநாடு என்பது ஜே. ஆரிடம் நாம் கேட்டுப்பெறும் பிச்சை அல்ல; அது நாமாகவே எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். அது நமக்குத் தெரியும். ஆனால் ஜே. ஆர். தமிழர் கூட்டணி முன்பு கோரிய வேறு எந்த உரிமையைத் தான் கொடுத்திருக்கிறார்?

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து —உத்தியோக மொழி அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்று கூட்டணி கோரியது—

இக்கோரிக்கை வழங்கப்படவில்லை. தமிழுக்கு உத்தியோகமொழி அந்தஸ்து வழங்கப்படவில்லை; சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக நீடிக்கிறது. தமிழ் தாழ்ந்த நிலையிலேயே கிடக்கிறது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பை மாற்றியமைத்து—ஒரு சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்படவேண்டுமென்று கோரப்பட்டது—

அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை!

பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பில் தரப்பட்டுள்ள அதே இடம் இந்து, இஸ்லாமிய, கிறித்தவமதங்களுக்கும் தரப்படவேண்டுமென்றும், அரசு மதச்சார்பற்றதாக இருக்கவேண்டுமென்றும் கூட்டணி கோரியது—

அது ஏற்றுக்கொள்ளப்படாதது மட்டுமல்ல—முன்னைய அரசியலமைப்பில் இருந்ததைவிட பௌத்தத்துக்கு மட்டும் புதிய அரசியலமைப்பில் மேன்மையான இடம் தரப்பட்டு, பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த உரிமை ஏனைய சிறுபான்மை மதங்களுக்குத் தரப்படவில்லை!

இது போதாதற்கு சிறிலங்காவின் தேசியக்கொடியில் பௌத்த ஆதிக்கத்தை காட்டும் முறையில் நான்கு மூலைகளிலும் அரசிலை பொறிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளின் தாய் மொழியே கட்டாய பாடமொழியாக இருக்கவேண்டுமென்றும், அதற்கு சட்டரீதியான உத்தரவாதம் வேண்டுமென்றும் கூட்டணி கோரியது.

அக்கோரிக்கை மறுக்கப்பட்டு, ஒரு தமிழ்ப்பிள்ளை விரும்பினால் சிங்களத்தில் படிப்பதற்கு அரசியலமைப்பில் வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், மலைநாட்டில் வாழும் பத்து இலட்சம் தமிழர்களின் குழந்தைகளுக்கும், சிங்களத்தையே பாடமொழியாக்கி, அவர்களை காலப்போக்கில்சிங்களவர்களாக்க திட்டம்திட்டப்பட்டுள்ளது.

வடக்கும், கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமென்பதை ஏற்றுக்கொண்டு— அங்கு சிங்களவர்களை குடியேற்றி,அப்பிரதேசங்களை சிங்களமயமாக்கும் கொள்கையை கைவிடவேண்டுமென்று கூட்டணி கோரியது—

ஜெயவர்த்தனவோ— வடக்கும், கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்கமாட்டேன் என்று தேசிய பேரவையில் பகிரங்கமாகக் கூறியதுடன், இப் பிரதேசங்களில் மேலும் சிங்களவர்களைக் குடியேற்றப்போவதாக அறிவித்திருக்கிறார்—

இப்படியெல்லாம் இங்கே செய்து கொண்டு, டெல்லியில்— கேட்டதெல்லாம் கொடுத்து விட்டேன் என்று ஜே.ஆர். கூறினால், உண்மை தெரிந்த பின்னர் அது கேட்டு கைகொட்டி நகைப்பார்கள் பத்திரிகை' தொலைக்காட்சி நிருபர்கள்.

தனக்கேயுரிய பிரித்தாளும் தந்திரத்தையும் அங்கே போய்க் காட்டியிருக்கிறார் ஜனாதிபதி ஜே. ஆர்.

அதாவது தமிழர் பிரச்சினையென்பது உண்மையில் இன்று யாழ்ப்பாணத் தமிழரின் 'பிரச்சினையாகத்தான் காணப்படுகிறதாம். ஏனைய இடங்களில் பிரச்சினை எது இல்லையாம். இதிலும் பிரதேச வேறுபாட்டு விஷம் கலக்கிறார் ஜனாதிபதி.

உண்மையில் இன்று தமிழர்களுக்கு நெருக்கடியும் பிரச்சினையும் இருப்பது யாழ்ப்பாணத்துக்கு வெளியேதான். வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, . கல்குடா, பட்டிருப்பு, திருகோணமலை, மூதூர், சேருவில, அம்பாறை போன்ற பிரதேசங்களில் தான், சட்டவிரோதமாகக் குடியேற்றப்பட்ட சிங்களவரின் அத்துமீறிய அட்டகாசங்களும், அரசின் சிங்களக் குடியேற்றங்களும் அதிகரித்து வருகின்றன. தமிழர் பிரச்சினையென்பது அங்கேதான் பூதாகாரமாக புறப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியோ அவற்றையெல்லாம் பார்க்க மறுத்து யாழ்ப்பாணத்தில்தான் தமிழர் பிரச்சினையிருப்பதாக கதை அளக்கிறார்.

மதுறுஓயா சிங்களக் குடியேற்றம் கிழக்கு மாகாணத் தமிழர்களை விழுங்க வருகிறது. அங்கே தமிழன் வாழ்வா சாவா என்றுதுடிக்கிறான்— ஜனாதிபதியோ கதையை திசை திருப்புகிறார்.

கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குத்தான்!

—கோவை மகேசன்,

---

### தமிழர் விரோதியே—

—3-ம் பக்கத்தொடர்

யொட்டி சென்னையில் பலத்த பொலீஸ்காவல்போடப்பட்டிருந்தது. திரு. ஜெயவர்த்தனவுக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டப்படலாம் என்ற அச்சம் பொலிசாரிடம் காணப்பட்டது.

திரு. ஜெயவர்த்தனவுக்குப் பாதுகாப்பாக இங்கிருந்து ஏராளமான சி.ஐ.டி. பொலிசார் இந்தியா சென்றுள்ளனர். சென்னையில், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தரும் இயக்கங்களின் பிரமுகர்கள் பலத்த பொலீஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

திரு. ஜெயவர்த்தனவின் வருகையை தமிழ்நாடுசட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவரும் திமுக தலைவருமான கலைஞர் கருணாநிதி பகிஷ்கரித்தார். சென்னை மக்களும் திரு. ஜெயவர்த்தனவை வரவேற்பதில் அக்கறை செலுத்தவில்லை. தமிழ்நாட்டில் திரு. ஜெயவர்த்தனவுக்கு எந்தவிதமான பொது வரவேற்பும் அளிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

---

### த.வி.கூ வாராந்தக் கருத்தரங்கு

காலம்:- 4-11-78 சனி மாலை 6.மணி,

தலைப்பு:.

(1) ''தமிழ் ஈழ விடுதலைக் குரலை உலகின் முன் வைக்க தளபதி அமிர் மேற்கொண்ட உலக வலம்!''

(2) ''தமிழ்த் தேசிய விடுதலையை நசுக்க தார்மீக அரசுமேற்கொள்ளும் தில்லுமுல்லுகள்''

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் உரை நிகழ்த்துவர்.

---

### தமிழ்த் தீவிரவாதி--

—1-ம் பக்கத் தொடர்

ஜே. ஆர். :- நான்எதைச் செய்ய முடியுமோ, அதைப் பகிரங்கமாகச் செய்து விட்டேன். நேசக்கரத்தைநீட்டி விட்டேன். தனிநாடு இந்தாருங்கள் என்று மட்டும் தான் கொடுக்கவில்லை. அது மட்டும் முடியாது. இப்போதுள்ள நிலையைவிட இதற்குமேல் என்னால் எதுவும் செய்ய முடியாது.''

(ஆதாரம் ஈன். 1-11-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களே!

# குழம்பாதீர் - குழப்பாதீர்!

# கொள்கைக்கு ஊறு விளைவிக்காதீர்!

தமிழினத்தின் இழந்த அரசுரிமையை— இறைமையை மீட்டு, தமிழீழ அரசை மீண்டும் உருவாக்கியே தீருவோம் என்கிற காத்திரமானதும் புனிதமானதுமான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் இயக்கம் தமிழர்விடுதலைக் கூட்டணி. இந்த ஒரேயொரு இலட்சியத்தை முன்வைத்து— 1977 பொதுத் தேர்தலை ஒரு சர்வஜனவாக்கெடுப்பாகப் பிரகடனப்படுத்தி— தமிழீழ மக்களின் அபரிமிதமான அன்பையும் பேராதரவையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டுள்ள ஒரே இயக்கம் தமிழர் விடுதலைக்கூட்டணி.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஒவ்வொரு அசைவையும் ஒவ்வொரு முடிவையும் இன்று சிங்கள அரசும், உலகமும் ஊன்றிக்கவனித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழர் விடுதலைக்கூட்டணியிலுள்ளவன் சிந்துகின்ற ஒவ்வொரு வார்த்தையையும், முன்வைக்கின்ற ஒவ்வொரு அடியையும் கொண்டே உலகம் தமிழீழக் கொள்கையிலும், சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடுவதிலும் நமக்கிருக்கும் உறுதியையும் தன்னம்பிக்கையையும் எடை போட்டுவருகிறது. நாம் எவ்வளவு தூரம் பிடிவாதமாகவும், முன்னுக்குப் பின் முரண்பாடின்றியும் கட்டுப்பாட்டுடனும் இலட்சியப்பாதையில் முன்னேறுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு உலக ஆதரவு நம்மை நெருங்கிவருகிறது.

தந்தை செல்வாவுக்கிருந்த தளர்ச்சியற்றமனமும், பிடிவாதமும், அழுத்தமான உறுதியும், நேர்மையான அரசியல் போக்குமே, முப்பது ஆண்டுகளாக நம்மைச் சிங்களவர்களால் வெற்றிகொள்ள முடியாதபடி தடுத்துவைத்திருந்தது.

அவரது வழியில் வந்த நாம்—அவரிடம் அரசியல் பயின்ற நாம்—அந்தப் பாதையை மறந்திடலாமா? ஆளுங்கட்சிக்கு ஆலவட்டம் வீசப்புறப்படலாமா?

நம்மை நாமே அழித்துக் கொள்ளாதவரை —எதிரிகளால் நம்மை அழிக்கவே முடியாது என்று திமுகழகத்தினரைப் பார்த்து பேரறிஞர் அண்ணா அடிக்கடி கூறுவது வழக்கம். அதே கூற்று இங்கு தமிழர்விடுதலைக்கூட்டணிக்கும் முற்றிலும் பொருந்தும்.—

நம்மைநாமே அழித்துக் கொள்ளும் பாணியில்-நமது இயக்கத்துக்கு நாமே குழி தோண்டும் முறையில்— மாற்றானிடம் நமது இயக்கத்தையே காட்டிக்கொடுக்கும் விதத்தில் தெரிந்தோ தெரியாமலோ பேச்சுக்களை நிகழ்த்திக்கொண்டும், அறிக்கைகளை விடுத்துக்கொண்டும் சில கூட்டணிப் பா. உக்கள் இருக்கிறார்களே என்று கூட்டணியின் தொண்டன்— நாட்டு விடுதலையொன்றைத் தவிர— வேறு எதையுமே கூட்டணியிடம் எதிர்பாராத தொண்டன்— இன்று வேதனைக்கண்ணீர் வடிக்கிறேன்!

### வவுனியா சிவா

வவுனியா பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் கூட்டணியின் ஒரு முக்கிய பொதுக்குழு உறுப்பினர்; எல்லைக் காவலர் என்று இதயம் நிறையப் பாராட்டப்படுவர்; பொறுப்புடன் செயற்படவேண்டியவர்; அனுபவம் நிறைந்தவர்; இப்படிப்பட்டவர் 24-10-78 வீரகேசரி பத்திரிகையில் வெளியிட்ட அறிக்கை பொறுப்பு வாய்ந்தஒன்றாகக்காணப்படவில்லையே!

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அவர் விலகுவதோ அல்லது விலகாமலிருப்பதோ வேறு விஷயம். பாராளுமன்றத்தினுல் விடுதலை பெறமுடியும் என்ற நம்பிக்கை கூட்டணிக்கு கிடையாது. பாராளுமன்றத்துக்கு வெளியே நடைபெறும் போராட்டத்தின் மூலமே விடுதலையை ஈட்டிக் கொள்ளமுடியும்!

ஆனால், தமிழ் மண்ணைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற திட்டங்களோ நடவடிக்கைகளோ கூட்டணியிடம் தாமறிந்தவரை கிடையாது என்று வவுனியா சிவா தமது அறிக்கையில் கூறியிருக்கத் தான்வேண்டுமா? இயக்கத்தின் மீது இப்படி பழி சுமத்தி மாசு கற்பிக்கவேண்டுமா?

ஆவரங்கால் மாநாட்டின் போது தமிழ் மண்காக்கும் இயக்கம்பற்றி இவரும்தான் சிங்கேறுபோல முழங்கினார். கூட்டணியின் செயல்திட்டங்களை வகுக்கும் 21பேர் கொண்ட செயற்குழுவில் இவரும்தான் உறுப்பினர். இந்நிலையில் கூட்டணியின் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் தீர்மானிக்கும் பொறுப்பு இவருக்கும் உண்டு; கூட்டணியிடம் திட்டம் இல்லாவிட்டால் அதற்கு சிவாவும் தான் பொறுப்பு!

சரி, வாதத்துக்காக திட்டமெதுவும் கூட்டணியிடம் இல்லையென்றே வைத்துக் கொள்வோம்; திட்டங்கள் இல்லையானுல் திட்டங்களை உரிய இடத்தில், உரிய முறைப்படி பேசி, வகுத்துச் செயற்படுத்துவதே தவிர— இப்படி பத்திரிகையிலே அறிக்கைவிட வேண்டிய அவசியம் என்ன வந்தது? நம்மிடம் எதுவுமில்லையென்று எதிரிக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியதன்றி இதனுல் கிடைத்த பலன் என்ன—அமைச்சர்கள் மகிழ்ச்சியடைந்ததைத் தவிர?

வவுனியா சிவா இதை அமைதியாகச் சிந்திக்க வேண்டும்.

### பட்டிருப்பு கணேசலிங்கம்

அடுத்து பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கம் அவர்களுக்கும் சில வார்த்தைகள் சொல்லவேண்டியுள்ளது. திரு. கணேசலிங்கம் துணிச்சல் மிக்கவர்; சிங்களக் குடியேற்றத்தை கிழக்கு மண்ணில் துளியும் அனுமதிக்க இடமளியாது போராடிவருபவர்; சிங்கள அமைச்சர்களுக்கு ஆலவட்டம் வீசாதவர், அப்படிப்பட்டவர்கூட தம்மை அறியாமலோ, அறிந்தோ கொட்டியுள்ள சில வார்த்தைப் பிரயோகங்கள், இளைஞர்களின் சிந்தனையோட்டத்துக்கோ இயக்கத்துக்கோ கிஞ்சிற்றும் பொருந்தியதாகக் காணப்படவில்லை;

பொத்துவில் பா. உ. திரு. கனகரத்தினம், தமிழர் விடுதலைக் கூட்டணியினராக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்; அவரது வெற்றிக்காக கூட்டணி ஆதரவாளர்கள் பலர் ஓடாக உழைத்தனர். கூட்டணியின் கொள்கையை கூறி, கூட்டணிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றதும், குத்துக்கரணமடித்து அரசுடன் ஒட்டிக்கொண்டு அரசியலில் தனது கற்பைப் பறிகொடுத்தவர் திரு. கனகரத்தினம். பொத்துவில் தொகுதி மக்களுக்குத் தேர்தலின் போது கொடுத்த வாக்கை மீறியவர்: கூட்டணிக்கு எழுத்தில் கொடுத்த சத்தியத்தை காற்றில் பறக்க விட்டவர். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் துரோகம் செய்த கனகரத்தினத்தின் தலைமீது இடிவிழும் என்று அன்று தேசிய பேரவையில் மனவேதனையுடன் சாபமிட்டார் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம்.

இவ்வாறு குத்துக்கரணமடித்தவரை கொள்கையை காற்றில் பறக்க விட்டவரை--கூட்டணிக்குத் துரோகம் செய்தவரை—அதாவது கனகரத்தினத்தை— ''கண்ணியவான் — கறைபடியாத கரமுடையவர்'' என்று உச்சிமேல் தூக்கிவைத்து மெச்சிப் புகழ்ந்திருக்கிறார் திரு. கணேசலிங்கம்; (ஆதாரம்: வீரகேசரி 24-10-78)

தான் சார்ந்த கட்சியை காட்டிக் கொடுத்த கரம்-- எப்படிக் கறைபடியாத கரமாகும்? மக்களுக்கு தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதியைமீறிய ஒருவர் எப்படிக் கண்ணியவானுகும்? திரு. கணேசலிங்கம் சற்று ஆறுதலாகச் சிந்தித்துப் பார்க்கட்டும்!

### திட்டம் கேட்கும் இடம் அதுவா?

இவை எல்லாவற்றையும் விட வேதனைக்குரிய நிகழ்ச்சி மட்டக்களப்பில் நடந்த மட்டக்களப்பு அபிவிருத்தி மாநாட்டில் — சிங்கள சிறீலங்காவின் பிரதமர் பிரேமதாசாவும் கலந்து கொண்ட கூட்டத்தில்—திரு. பிரேமதாசாவையும் முன்னுல் வைத்துக்கொண்டு—ஓராண்டுக்குள் தமிழ் ஈழம் அமைப்பதற்கு தீவிரவாத தமிழ் இளைஞர்களிடம் கணேசலிங்கம் திட்டம் கேட்டநிகழ்ச்சியாகும். (ஆதாரம்—வீரகேசரி 27-10.78)

கூட்டணி தமிழீழ விடுதலைப்போரை நடத்துகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கிறது. எனவே கூட்டணி விடுதலைக்கான திட்டங்களை முன்வைத்துஅதைசெயற்படுத்த வரும்படி இளைஞர்களை அழைக்க வேண்டுமே தவிர கூட்டணிபா.உ.ஒருவர் இளைஞர்களை எதிரியின் முன்னுல் நின்றுகொண்டுதிட்டம்கேட்கலாமா? இதைக் கேட்டுக் கொண்டிருந்த பிரேமதாசா என்ன நினைத்திருப்பார்? ஓகோ இவ்வளவுதானு இவர்கள்? கூட்டணியிடம் எந்த வித திட்டமும் இல்லாமற்றானு இவ்வளவு கத்துக் கத்துகிறார்கள்? தீவிர இளைஞர்களை ஒழித்துக்கட்டி விட்டால் தமிழ் ஈழப் பிரச்சினையையே இல்லாமலாக்கி விடலாம் என்று அவர் மனதுக்குள் திட்டம் போடலாமல்லவா?

பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினரான திரு. பூ. கணேசலிங்கம் அந்த இடத்திலே இவ்வாறு பேசியிருக்கலாமா? சரி, இளைஞர்களைத் திட்டம் கேட்பதாக இருந்தாற்கூட, அதை இளைஞர் பேரவையின் கூட்டத்திலோ — கூட்டணியின் பொதுச்சபையிலோ— தனியாக அல்லவா அது பற்றிப் பேசியிருக்க வேண்டும்?

### இராசதுரை

அடுத்து வேதனைக்கும் விசனத்துக்குமுரிய நிகழ்ச்சி. கூட்டணியின் இரெட்டை தலைவர் என்ற பதவியை அலங்கரித்துக்கொண்டிருக்கும் மட்டக்களப்பு முதல்வர் திரு. செ. இராசதுரை அவர்கள் சம்பந்தப்பட்டதாகும்.

கடந்த தேர்தலுக்குப்பின்னர், மட்டக்களப்பில் , திரு. கணேசலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டணியின் பொதுச்சபைக்கூட்டம் வரை தனிவழி சென்ற இராசதுரை மீண்டும் கூட்டணிக் கூட்டங்களில் முகம் காட்டினார். ஆவரங்கால் மாநாட்டிலும் ஆவேச உரையாற்றினார். மட்டக்களப்பில் கூட்டணிக் கிளையை நிறுவுவதில் இருந்து வந்த சிக்கல்களையும் கூட்டணித் தலைமை தீர்த்து வைத்துச் சமரசமேற்படுத்தியிருந்தது.

ஆயினும் கூட்டணியின் இரெட்டை துணைத்தலைவரான திரு. இராசதுரை, அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் பொது வரவேற்புக்கள் எதிலும் கூட்டணி பா. உக்கள் பங்குபற்றக்கூடாது என்ற கூட்டணியின் நிரந்தரக் கட்டளையை மீறி, அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சென்றிருந்த பிரதமர் திரு. பிரேமதாசாவுக்கு வெற்றிலை கொடுத்து வரவேற்று, அவரது வரவேற்புக் கூட்டங்களில் பிரேமதாசா புகழ்பாடி தனது தமிழின் திறமையைக் காட்டியிருக்கிறார். இதனுல் ஏற்படும் விளைவுகள் எதையும் சந்திக்கத் தயாரென்றும் சவால் விட்டிருக்கிறார்; ஒத்துழைப்புப் பல்லவியும் பாடியிருக்கிறார்.

ஒத்துழைப்பு எதற்காக? அபிவிருத்தியென்ற போர்வையில் மதுறு ஓயாவில் சிங்களவரை குடியேற்றி தமிழ் நிலத்தை கபளீகரம் செய்யவா என்பது நமக்கு விளங்கவில்லை.

கூட்டணியின் மூத்த தலைவரே இவ்வாறு கட்டுப்பாட்டை மீறும்போது கூட்டணியை ஒரு கட்டுப்பாடுள்ள இயக்கமாக எப்படிக் கட்டி வளர்ப்பது, எப்படி அதை ஒரு இறுக்கமான இயக்கமாக உருவாக்குவது என்பதை தீர்மானிக்க வேண்டியது கூட்டணித் தலைமைப் பீடமான அதன் செயற்குழு, பொதுக்குழு தீர்மானிக்க வேண்டிய விடயமாகும்.

ஆனால், நாம்இங்குஒன்றே ஒன்றைக் கூற விரும்புகிறோம்.

கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களே, கொள்கை வழி நில்லுங்கள்— உங்களுக்கு கடந்த தேர்தலின் போது தமிழ் மக்கள் தந்த தமிழீழக் கட்டளை வழியே செல்லுங்கள். தமிழீழஇலட்சியத்திலே உங்களுக்கு நம்பிக்கையில்லையானுல், அந்த இலட்சியத்தை முன்வைத்து நீங்கள் பெற்றுள்ள பா. உ. பதவியை ராஜினமாசெய்து விட்டு ஒதுங்கிவிடுங்கள்; அதைவிட்டு, உங்களையும் குழப்பி, மக்களையும்குழப்பி, கூட்டணிக்கும் மாசு தேடாதீர்கள்!

—சங்கிலியன்

**சுதந்திரன் சந்தா**

ஓராண்டு ரூபா 50-00
அரையாண்டு ரூபா 25-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாப்பிடியாக போராடுவதன் மூலமே தமிழீழத்தை அமைக்க முடியும்

—3-ம் பக்கத் தொடர்

கள் 70%மாக இருக்கும்போது தமிழ் வாக்குகள் 13% அல்லது 14% இருப்பின் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதில் சிங்கள வாக்குகளே உரிய பங்கைப் பெறும். அதாவது சிங்கள வாக்குகளே ஆட்சியாளரைத் தீர்மானிக்கும். சிங்களவர்கள் கடந்த காலத்தில் ஆட்சியாளரைத்தெரிவு செய்வதில் மேற்கொண்டிருந்த போக்கானது இதைத் தெளிவு படுத்துகிறது. அதாவது 1983 பொதுத் தேர்தலிலும் சரி, 1984 குடியரசுத் தலைவர் தேர்தலிலும் சரி எந்தப் பக்கத்திற்குத் தமிழர் வாக்கை இட்டாலும் அது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தாது. சிங்களவர்கள் இடும் வாக்குகள் தான் ஆட்சியாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும், இந்த நிலையில் தமிழர்களது அரசியல் நிலை என்ன? என்பது கேள்விக்குறியாகவே யுள்ளது.

## தமிழர் நிலையென்ன?

முன்னைய அரசியலமைப்பில் (1972) பௌத்த மதத்திற்குக் கொடுத்த முதலிடத்தை மேலும் வலுவாக்கும் வகையில், தெரிவுக் குழுவில் கூட ஆராயாமல் தேசியக் கொடியின் நாலு மூலையிலும் அரச இலையைப் பதித்து இருப்பது சிங்களவர்கள் தமது காரியங்களை தமது விருப்பப்படியே செய்து முடிப்பார்கள் என்பதை விளக்குவதாகவுள்ளது.

அடிப்படை உரிமைகள் பற்றிய பிரிவானது சகலருக்கும் சமத்துவம் என்கிறது. சிங்கள மொழியை அரசாங்கமொழியாக வைத்துக் கொண்டு தமிழ் மொழிக்கு அத்தகைய அந்தஸ்தை வழங்காது விட்டுவிட்டு, தமிழ்மொழி தேசிய மொழியாக இருக்கும் எனக்கூறப்பட்டுள்ள போதிலும் அரசாங்க ஊழியர்களை பதவியுயர்வு, சம்பளயுயர்வு என்பனவற்றிற்கு சிங்களம் படிக்குமாறு நிர்ப்பந்திப்பது அடிப்படை உரிமைகள் பற்றிய விதிக்கு மாருக நடைமுறையில் சமத்துவம் இல்லை என்பதையே எடுத்து விளக்குவதாகவுள்ளது. தமிழர்கள் சிங்களம் படிக்க வேண்டியதாகவுள்ளது. ஆனல் சிங்களவர்கள் தமிழ் படிக்கவேண்டியதில்லை. இது தற்போதைய அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பற்றி விதிகளுக்கு முரணுகநடைமுறையில் காணப்படும் அம்சமாகும். இங்கு அடிப்படை உரிமைகள் பற்றிய விதிகள் அர்த்தமற்றுக் காணப்படுகின்றன.

## போதனு மொழி

மேலும் ஒரு பிள்ளையின் போதனு மொழி தாய்மொழியில்தான் இருக்க வேண்டும். ஆனல் அரசியலமைப்பிலே தேசிய மொழிகளில் ஒன்றில் ஒரு பிள்ளையின் போதனுமொழி இருக்கலாம் எனக்கூறப்பட்டுள்ளது. சிங்கள மொழி அரசாங்கமொழியாக இருப்பதால் காலப்போக்கில் தமிழ்இனம் சிங்களவருடன் இரண்டறக்கலக்கும் நிலைக்கே இங்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. தாய் மொழியில் ஒரு பிள்ளைக்குக் கல்வியூட்டும் உரிமையை இது மறுப்பதாகவுள்ளது. இந்த சட்டத்தின் அடிப்படையில் சிங்களப் பகுதிகளில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு மூடுவிழா வைக்கலாம். கடந்த காலங்களில் சிங்களப் பகுதிகளில் இருந்த தமிழ்ப்பாடசாலைகள் பல மூடப்பட்டன. முன்னைய பிரதமர் சிறிமாவோ அம்மையார் தமிழ் மக்களை குறிப்பாக இந்திய வம்சாவளியினரை சிங்களவர்களுடன் இரண்டறக் கலக்க வைப்பதையே கல்வியமைச்சு அதிகாரிகள் குறிக்கோளாகக்கொண்டு செயல்பட வேண்டும் என கல்வியமைச்சு அதிகாரிகளுக்குப் பகிரங்கமாகக் கூறினர்.

## குடியேற்றம்

''வேளாண்மையும் தேசப்பற்றும்'' என்ற தலைப்பில் டி. எஸ். சேனநாயகாவின் பெயரில் ஆதர் ரணசிங்கா எழுதி வெளியிட்ட நூலில் குடியேற்றத் திட்டத்தின் ஊடாகத் தமிழர்களைச் சிங்களவருடன் இரண்டறக் கலக்கும் நச்சுத்திட்டம் அன்றே வெளியிடப்பட்டது.

## சமத்துவம் எங்கே?

தற்போதைய அரசியலமைப்பின் 24ம் விதி நாடு பூராவும் சிங்களம் தான் சட்ட மொழியாகவிருக்கும் எனக்கூறுகின்றது. தமிழுக்கு அத்தகைய உரிமை கிடையாது. ஆனல் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சில நீதிமன்றங்களில் தமிழ்மொழியில் வழக்காடுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அம்பாறை, வவுனியா, திருகோணமலை முதலான மாவட்டங்களில் நீதிமன்றப்பதிவேடுகள் சிங்கள மொழியில்தான் இருக்க வேண்டும எனவும் கூறப்பட்டுள்ளது. தமிழுக்கு அந்த உரிமை கிடையாது.

வடக்குகிழக்கு மாகாணங்களில் உள்ள ஏனைய மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களிலும் நீதி மன்ற மொழி சிங்கள மொழிதான் என்று நீதியமைச்சர் கருதினல் அதையும் மாற்றியமைக்கலாம். அதுமட்டுமல்ல ஒரு லட்சத்து ஐம்பதினுயிரம் தமிழர்கள் வாழும் கொழும்பில் உள்ள நீதிமன்றங்களில் தமிழர்கள் தமிழில் வழக்காடும் உரிமை கிடையாது. சிங்களத்தில் தான் வழக்காட வேண்டும். ஆனல் சிங்களவர்கள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் வாழும் சிங்களவர்களுக்கு சிங்களத்தில் வழக்காடும் உரிமை இருக்கிறது. இங்கும் அடிப்படை உரிமைகளில் சமத்துவம் என்பது அர்த்தமற்றுக் காணப்படுகின்றது.

1956ம் ஆண்டு தொடக்கம் அரசதுறைப்பணிக்குத் தெரிவு செய்யப்படுபவர்களது எண்ணிக்கையைப் பார்க்கும்போது படிப்படியாகத் தமிழ் மக்களது எண்ணிக்கையானது குறைந்து கொண்டு செல்ல தமிழர்களுக்கு அளிக்க வேண்டிய உத்தியோக வாய்ப்புக்கள் சிங்களவருக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது, தலைக்குரிய வருவாயைப் பொறுத்த நிலையிலும் கூட 18 விகிதம் கண்டிச் சிங்களவரது வருமானம் உயர்ச்சி பெற்றுள்ள வேளையில் 21விகிதம் தமிழர்களது வருமானம் குறைவடைந்துள்ளது. ஆளும் இனம் சிங்கள இனமாக இருக்கும் வரையில் கட்சித் தலைவர்கள் மாறினலும் எமது நிலையில் மாற்றமில்லை. இதற்குக் காரணம் ஆட்சியைப் பிடிக்கவும் அதைப் பேணவும் அவர்கள் சிங்களவர்களது அபிலாசைகளைத்தான் பூர்த்தி செய்ய வேண்டுமே தவிர வேறெதுவும் கிடையாது.

## காலங்கடந்தநிலை

1978ம் ஆண்டு அரசியலமைப்பில் சில முன்னேற்றங்கள் காணப்படினும் இவற்றைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்திருந்தால் தமிழர்கள் இவற்றை ஓரளவுஏற்றுக்கொண்டிருப்பர். ஆனல் மாறி மாறிப் பதவியேற்ற சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களது நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளாத முறையில் காலத்திற்குக்காலம் தமது கொள்கைகளை மாற்றி வந்தபடியால் இன்று தமிழினம் இவற்றையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையிலில்லை.

சிங்களவர்கள் பெரும்பான்மையினமென்பதோ தமிழினம் சிறுபான்மையினம் என்பதோ அல்லாமல் தமிழினம் தாம் ஒரு தனியான தேசிய இனம் என்ற உணர்வு (super ordinate group) நன்கு வலுத்து விட்டது. அத்தோடு தாம் இதுவரை காலமும் பாகுபாடு காட்டப்பட்ட குறைந்த நிலையில் வைத்துக்கணிக்கப்பட்ட (differenciated subordinate group) மக்கள் என்ற எண்ணம் நன்கு புரிந்து விட்டது. இந்த உணர்வுகள் இனிமேல் என்றுமே அழியக்கூடியன அல்ல.

## மூன்று வழிகள்

சிங்களவர்கள் தமிழர்களுடன் இரண்டறக் கலக்க விரும்புகிறார்கள். ஒதுக்கப்பட்ட மக்கள் தமிழ் ஈழம் போன்ற தனியான அமைப்பைக்கோரும் நிலையில் உள்ளார்கள். தமது தேசிய இயல்புகளை வளர்க்கத் தமிழினம் தனக்கொரு தாயகத்தை அமைக்க விரும்புகிறது. இத்தகைய ஒரு சுய அமைப்பை உருவாக்கச் சிங்கள இனம் தடையாக இருப்பதைத் தமிழினம் வெறுக்கின்றது. இத்தகைய தடைகளைத் தாண்டித் தமிழினம் தம்மை விடுக்க மூன்று வழிகள் தான் உண்டு.

(1) 1946-ஆம் ஆண்டு ஜின்னு பாகிஸ்தான் தேவை என்றபோது ராஜாஜி முன்வைத்த திட்டப்படி வெளிநாட்டு விவகாரம் பாதுகாப்பு—பொதுத் தொடர்பு ஆகிய மூன்று துறைகளையும் மத்திய அரசிடம் வைத்துக் கொண்டு ஏனையவற்றை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கும் முறையிலான அரசமைப்பு என்றுகூறியபோது ஜின்னு அதை மறுத்து ராஜாஜி — திட்டப்படியிலான பாகிஸ்தான் ''பூச்சி அரிக்கப்பட்டபாகிஸ்தான்' ஆகத்தான் இருக்குமென்று கூறி நிராகரித்தார். இதைப் போல் தமிழ்த்தலைவர்களும் எந்த நிலையிலும் தமிழ்ஈழம் தவிர வேறு எந்த அமைப்பிற்கும் விட்டுக் கொடுக்காது (uncompromising) போராடுதல்.

(2) வங்காள தேசம் பல இலட்சக் கணக்கானேரைப் பலி கொடுத்துத்தான் உருவாக்கப்பட்டது. வங்காள தேசத்தின் வெற்றிக்கு இந்திய தலையீடும் சர்வதேச ஆதரவும் இருந்தது. இப்படியானளவில் உயிர்ப்பலி கொடுத்து ஒரு நாட்டை அமைக்கலாமா? என்பதும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

(3) இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் முதலாம் உலகப்போரின் காலகட்டத்தில் லொயிட்ஸ் ஜோர்ஜ் இந்தியர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து ஏமாற்றினன். பின்னர் 1930லும் இந்தியத் தலைவர்கள் ஏமாற்றப்பட்டனர். பின்னர் 1935ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு இந்திய மக்களுடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்யாதபோது காந்தி தீவிர போராட்டத்தில் இறங்கினர். இதே போல் இங்கும்பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்ட தமிழ்த் தலைவர்கள் பல தடவை சிங்களத் தலைவர்களால்ஏமாற்றப்பட்டனர். ஆகவே கொடுக்கப்பட்டுள்ள அற்ப சொற்ப சலுகைகளை ஏற்காது விடாப்பிடியாகப் போராடுதல் மூலம் தமிழர் தமது இலட்சியத்தை அடையலாம்.

இவைமூன்றும் தான் இன்றுள்ள வழிகளாகும். இந்நிலையில் தமிழ்த் தலைவர்கள் வீரமொழிகளைப் பேசினல் அவை சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கு எதிராகச் செயல்படவே வழி பிறக்கும். ஆகவே எதிர்ப்புணர்ச்சியோடு கூடிய பொறுமையும் சகிப்புத்தன்மையுடன் கூடிய பேச்சுவார்த்தைகளுமே (Resistance,patience negotiation and agitation) இன்று தேவையாகும். மாறிவரும் சர்வதேச சூழ்நிலையில் உலக நாடுகளின் தலையீடும் உதவியும் கிடைக்கும்.

தமிழ் பேசும் இனத்திற்கு சுயநிர்ணய உரிமையுண்டு. எமர்சன் என்ற அறிஞர் கூறியபடி எங்கு தனியான மொழியுண்டோ அங்கு தனியான இனம் இருக்கின்றது. (Where there is a separate language, there is a separate Nation.) தமிழ் இனம் தனியான தேசிய இனமே.

# கொழும்புக் கருத்தரங்கில் கலாநிதி வில்சன் அறிவுரை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் நன்றியுரை ஆற்றுகையில்,

''தமிழ் மக்கள் மத்தியில் அறிவாளிகளுக்குப் பஞ்சமில்லையாயினும் எல்லா அறிவாளிகளும் இனவிடுதலைக்கு உழைக்க முன்வருவதில்லை. இத்தகைய நிலையில் கலாநிதி வில்சன் அவர்களின் பணியானதுபெரும்பணியேயாகும். கலாநிதி வில்சன் அவர்கள் எழுதவிருக்கும் நூல்கள் தமிழின விடுதலைக்கு பெரும் உந்து சத்தியாக விருக்கும்'' என்றும் குறிப்பிட்டார்.

திரு. ஈழவேந்தன் அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து செல்வி. திலகவதி கணபதிப்பிள்ளையின் தேசிய கீதத்துடன் கருத்தரங்கு இனிது நிறைவுற்றது.

— தொகுத்தவர்: பொன். பூலோகசிங்கம்

# யூ. என். பி.யின் 'அபிவிருத்தி' காணீர்!

(1) மன்னாரில் 150 தமிழ்க் குடும்பங்கள் குடிகலைக்கப்பட்டு, அந்த இடத்தில்இராணுவத்தினர் துப்பாக்கி சுட்டுப் பழகும் இராணுவப் பயிற்சிக்களம் அமைக்கப்படுகிறது.

(2) வவுனியாவில் விமானத்தளம் அமைக்கப்பட்டது, அதைச் சுற்றிக் குடியிருந்த தமிழர் குடும்பங்கள் விரட்டப்படுகின்றன.

(3) கல்குடாவில் மூன்றரை இலட்ச ரூபா செலவில் பௌத்த விகாரை கட்டப்படுகிறது.

(4) முறிகண்டிக்கும் வவுனியாவுக்கு மிடையே தெருவோரத்தில் குடியேறியுள்ள தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து குடியெழுப்ப உத்தரவு இடப்பட்டுள்ளது.

(5) மதுருஓயாத் திட்டத்தின் கீழ் கல்லோயாத் தொகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறப் போகிறது.

(6) திருகோணமலைத் துறை முகத்தை சுதந்திர வர்த்தக வலயமாக்குவதன் மூலம், திருகோணமலையை தமிழர்களிடமிருந்துப்பறிப்பதற்கு திட்டமிடபடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் போரில்

## பெண்களின் வீர சாதனை!

**1930– ஏப்ரல் 6—ஆம் தேதியன்று காந்தியடிகள் தாண்டி கடற்கரையில் உப்பைச் சேகரித்து உப்புச் சட்டத்தை மீறினர். இது இந்திய நாடெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. எல்லா மாகாணங்களிலும் தலைநகரங்களிலும் தொண்டர்கள் கட்டுப்பாடாக உப்பைக் காய்ச்சி உப்புச் சட்டத்தை மீறுவதில் ஈடுபட்டார்கள். மிருக வெறி கொண்ட அடக்கு முறை நடவடிக்கைகளைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை. அஹிம்ஸையைக் கடைப்பிடித்து கொடுமைகளை எதிர்த்தார்கள். அபலைகளான ஆறு பெண்மணிகள் பம்பாய் காங்கிரஸ் காரியாலயத்தில் பொலிசாரின் பலாத்காரத்தை எதிர்த்து போராடிய சம்பவம் இது;**

### உப்புச் சத்தியாக்கிரகத்தில் உள்ளமுருக்கும் காட்சி!

10-4-1930 ஆம் நாள் மாலையில், சுமார் 300 பொலிசார் ஆங்கிலோ—இந்தியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களின் தலைமையில் பம்பாய் காங்கிரஸ் காரியாலயத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுடன் ஒரு மாஜிஸ்ட்ரேட்டும் இருந்தார். அவர்களைக் கண்டதும் அந்தச் சமயம் அங்கிருந்த காங்கிரஸ் தொண்டர்கள் முதல் மாடிக்கு செல்லும் படியருகில் கைகோத்த வழினை அடைத்து நின்று கொண்டார்கள். இவர்களைப் பலாத்காரமாக அகற்றிவிட்டு முதல் மாடிக்கு சென்றனர் பொலிசார். அங்கே உப்பு காய்ச்சி வைத்திருந்த அகலமான 32 இரும்பு தட்டுகளை உடைத்து நாசப்படுத்தினர்கள். மாடிக்கு ஓடி வந்த தொண்டர்களைப் பொலிஸார் தடுத்துப் பிடித்து கீழே தள்ளினர்கள். காரியதரிசி அபித் அலியை மட்டும் பொலிஸ் அதிகாரிகள் மேலே வர அனுமதித்தார்கள். எதற்காக தெரியுமா? கைது செய்வதற்குத்தான்.

உப்பு காய்ச்சி வைத்திருந்த தட்டுகளையும் பிற உபகரணங்களையும் நாசம் செய்யவும், அங்கே கைப்பற்றிய தஸ்தாவேஜுகளைப் பற்றிய பட்டியல் தயாரிக்கவும் இரண்டு மணி நேரம் பிடித்தது. இந்த செய்தி நகரெங்கும் பரவியது. சிறிது நேரத்தில் காங்கிரஸ் காரியாலத்தைச் சுற்றி சுமார் 60,000 மக்கள் கூடிவிட்டார்கள். நாலு புறமும் போக்கு வரத்து ஸ்தம்பித்து விட்டது.

முதல் மாடியில் நாச வேலையை முடித்துக் கொண்டு பொலிஸார் கீழே இறங்கி வந்து, காரியாலயத்துக்குள் நுழைய முயன்றார்கள். ஆனல் இவர்களை உள்ளே நுழையவிடாமல் ஸ்ரீமதி பெரின்பாய் கேப்டன் தலைமையில் வாயில் படியில் ஆறு பெண் தொண்டர்கள் நின்று கொண்டிருந்தார்கள். உள்ளே செல்ல விலகி வழி விடும்படி பொலிஸ் அதிகாரிகள் மிகவும் நயமாக கேட்டுக் கொண்டார்கள்; வாதித்தார்கள், பயன் இல்லை. "நீங்கள் எங்களை கைது செய்யுங்கள். எங்கள் கடமையை மட்டும் நாங்கள் புறக்கணிக்க மாட்டோம். இந்த இடத்தை விட்டு ஓர் அங்குலம்கூட அசைந்து கொடுக்க மாட்டோம்." என்ற ஒரே பதிலைத்தான் பொலிஸ் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு அவர்கள் அளித்தார்கள்.

ஆங்கிலப் பொலிஸ் அதிகாரிகள், தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமையைப் பற்றி தொண்டர் படைத் தலைவி ஸ்ரீமதி பெரின்பாய் கேப்டனிடம் எடுத்து கூறி விவாதித்தார்கள். "உங்கள் நாட்டின் மீது உங்களுக்கு பற்று இருக்கிறது. அதேபோல் எங்கள் நாட்டின் மீது எங்களுக்கு பற்று இருக்கிறது. எங்கள் நாட்டை விடுவிக்க நாங்கள் எதையும்செய்வோம்" என்று தொண்டர் படைத் தலைவி அந்த ஆங்கிலப் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பதிலளித்தார்.

வாதித்து பயனில்லைஎன்று கண்டதும், அந்த பொலிஸார் பெண் தொண்டர்களைப் பலாத்காரமாகஅந்த இடத்தை விட்டு அகற்றுவதில் ஈடுபட்டார்கள். ஆனல் அந்த ஆறு வீரப் பெண்களும் அவர்களுடையதலைவியும் இதைக் கண்டு அஞ்சவில்லை. இன்னும்உறுதியுடன் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். பத்து நிமிடங்கள் வரை அவர்களைப் பிடித்து தள்ளும் போராட்டம் நடந்தது. ஓர் அங்குலங் கூட அவர்களை பொலிஸாரால் நகர்த்த முடியவில்லை. ஆனல் இறுதியில் பொலிஸார் மிருகமாக மாறி, மிகவும் குரூரமாக போராடி, அவர்களைப் பலாத்காரமாக அந்த இடத்திலிருந்து அகற்றி விட்டு உள்ளே நுழைந்தார்கள்.

ஆறு அபலைப் பெண்களுக்கும் கடோத்கசர்கள் போன்ற பொலிசாருக்குமிடையே நடந்த மிருக வெறிப் போராட்டத்தை, வெளியே நின்று கவனித்துக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டுவிட்டது. ஆனல் அவர்கள் காந்திஜியின் அஹிம்ஸைத் தத்துவத்தை மதித்து தங்கள் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மேலும் என்ன நடக்கப்போகின்றது என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த வீரப்பெண்கள் காட்டிய வீரம் அவர்களை உற்சாகம் அடைய செய்தது. இந்த பெண்களுக்கு ஊக்கம் அளிக்க அந்தப் பெருங்கூட்டத்தினர் தேசிய கீதங்களைப் பாடினர்கள். அவர்களுடைய கீதம் வானைப் பிளந்தது. அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூட்டம் கட்டுப்பாடாக நடந்து கொண்டது அங்கே கூடியிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகை நிருபர்களை-ஏன், பிரிட்டிஷ் அரசின் அதிகாரிகளையும் கூடத்தான் பிரமிக்க வைத்து விட்டது. பார்ப்போருக்கு இது மிகவும் புனிதமான' தெய்விகக் காட்சியாகவே இருந்தது.

(நன்றி : மஞ்சரி)

---

### சிங்களசிறீ எதிர்ப்பும் ஈஸ்டேர்ன் பஸ் கொம்பனியும்!

"1958 இல் சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற போது அப்பொழுது ஈஸ்டர்ண் பஸ் கொம்பனியின் தலைவராகஇருந்த அவர் சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் எம்மோடு பங்குபற்றியதுடன் தமது கம்பெனியின் பஸ்களில் தமிழிலக்கத்தைப் பொறித்தார். இந்த விபரங்கள் இன்றைய இளைஞர்களுக்குத் தெரியாது"-(வீரகேசரி 27.10.78)

இவ்வாறு பிரேமதாசாவின் 'அன்புக்கு அடிமை' யான இராசதுரை பா.உ தேவநாயகம் பற்றிக் கூறியுள்ளார்.

இது அப்பட்டமான பொய்யாகும். ஒரு தவருன கூற்றுகும்.

உண்மையில் நடந்தது என்ன......?

1957 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆம் திகதி சிங்கள மயமாக்குதலின் ஓரம்சமான சிங்கள சிறீ திணிப்புக்கு எதிரான போராட்டம் வடகிழக்கு மாநிலம் முழுவதும் ஆரம்பமானது.

பத்து நாட்கள் சிறீ எதிர்ப்புப் போராட்டம் கிழக்கிலங்கை எங்கும் வெற்றிகரமாக நடைபெற்று வந்தது. கிழக்கிலங்கையில்— மட்டக்களப்பில்—இருந்த ஈஸ்டேர்ன் பேருந்து நிறுவனத்துக்கு 200 பேருந்துகள் சொந்தமாக இருந்தன. சிறீ எதிர்ப்புப்போராட்டத்தை நடத்திய தமிழரசுக்கட்சியினரும் சிறீ எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கிய பிற கட்சித் தொண்டர்களும் நடு நிலையாளர்களும் இந்த நிறுவனத்தின் தலைவருக்கும் ஏனைய நெறியாளர்களுக்கும் மீண்டும் மீண்டும் விடுத்தவேண்டுகோள்களைப் புறக்கணித்து சிங்கள சிறீயையும் ஆங்கில எழுத்துக்களையுமே தமது பேருந்துகளில் பொறித்து ஓடினர். (அன்று தமிழ் எதிர்ப்பு, சிங்கள ஏகாதிபத்திய ஆதரவு மனப்பான்மை கொண்டிருந்த 'ஈஸ்டேர்ன்' தலைவர் யாரென்பதை இனங்காண உதவிய இராசுவுக்கு நன்றி.)

இதனல் வெகுண்டெழுந்த மக்கள் ஈஸ்டேர்ண் பேருந்து நிறுவனத்தினரின் தமிழ் விரோத மனப்பாங்கை மாற்றியமைக்கும் நோக்குடன் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொண்டனர். இரண்டு நாட்கள் மட்டுநகர் மக்கள் ஈஸ்டேர்ண் பேருந்துகளைப் புறக்கணித்தனர். இதனல் நிறுவனத்திற்கு இரண்டு நாட்களில் ரூபா ஏழாயிரம் இழப்பு ஏற்பட்டது. ஆணவம் பிடித்த தலைமைப் பீடம் பணிந்து வந்தது. இதன் விளைவாக முதன் முதலில் சீ ஈ 3636 ஆம் இலக்கங் கொண்ட பேருந்தில் ஆங்கிலஎழுத்து தமிழ் எழுத்தாக மாற்றப்பட்டது. (ஆதாரம் 17-2-1957 சுதந்திரன்)

இது வரலாறு கூறும் உண்மை. இராசதுரை புதிய வரலாறு படைக்கப் புறப்பட்டிருக்கிருர். அது அவருடைய உரிமை. ஆனல் பழைய வரலாறுகளைத் தமது சுய நலனுக்காகத் திரிக்காமல் இருப்பாராக!

---

## விடுதலை போராட்டம்பற்றி வெளிநாடுகளில் பிரசாரம்செய்ய நமக்கோர் இயக்கம்தேவை!

எமது விடுதலைப் போராட்டத்துக்கு துணையாக எம்மிடையே 'Voice of Eelam' என்ற ஒரு இயக்கம் தோன்ற வேண்டும். இந்த இயக்கம் பல நாடுகளிலும் கிளைகள் கொண்டதாய் இலண்டனில் செயல்பட வேண்டும். இதற்கு ஒரு பத்திரிகை வேண்டும். அதன் பெயரும் 'Voice of Eelam என இருக்க வேண்டும்.

இலங்கைக்கிளை தமிழ் மக்களின் இன்னல்கள், சங்கடங்கள், இழப்புகள் பற்றிய தகவல்களையும், எம் எதிரிகளின் செயல்கள், நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும் தலைமையகத்துக்கு அனுப்ப வேண்டும். சம்பவங்கள் செய்திகள் பற்றிய படங்கள், போட்டோஸ்டாட் ஆகியவையும் இதில் அடங்கும். தலைமையகம் இவற்றை [illegible] பரப்ப வேண்டும்.

நமக்கு தமிழ் நாட்டிலும் ஒரு கிளை இருக்க வேண்டியது அவசியம். தமிழ் நாட்டில் 'ஈழத்தின் குரல்' என் ஒரு பத்திரிகையை நாம் நடத்துவிக்க வேண்டும். இதனல் தமிழ் நாட்டவர்க்கும் நன்மை, எமக்கும் வலிமை.

இலண்டனில் ஒரு பிரபலமான கார்ட்டூனிஸ்டின் சேவையை கூடியவரை இலவசமா, நாம் பெறமுயல வேண்டும். Voice of Eelam இவருடைய கார்ட்டூன்களைப் போட்டு வெளிவர வேண்டும். இதைச் செய்வோமாளுல் எங்கள் நோக்கத்தில் பாதிக்குமேல் வெற்றியடைந்தவர்களாவோம்.

எமது கொள்கைகள் வலியுறுத்தப்படும் வகையில் [illegible] காலத் தத்தகவேட்களின் பிரதிகளை இங்கிலாந்து, போர்த்துக்கல், ஒல்லாந்து மற்றும் வேறு நாடுகளிடமிருந்து பெற்று வெளியிட வேண்டும்.

பிரபலம் வாய்ந்த சென்ற கால நிகழ்கால தமிழ்ப் பிரமுகர்களையெல்லாம் Voice of Eelam அறிமுகப்படுத்தத் தவறக் கூடாது.

எமது பழங்கால நூல்கள் பற்றியும் நாம் வெளிநாட்டவர்களுக்குத் தெரியப்படுத்துவது அவசியம். எம் இறையொழுக்கம் பற்றிய அறிஞர்களின் கட்டுரைகள் வெளியாக வேண்டும்.

நம்மிடம் அறிஞர்கள் இருக்கும் போது நாம் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? Voice of Eelam உலகில் பவனி வரும் போது இங்கு எம் எதிரிகளின் வயிற்றைக் கலக்கும் என்பது திடம்.

எம் எதிரிகள் வெளிநாட்டுக் கடன்களும் உதவிகளும் பெற்று எம்மை அழிக்கும் முயற்சிக்கு நாம் இடமளியாது. இப்படிப்பட்ட உதவிகள் இவர்களுக்குக் கிடைக்காது செய்ய நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

இவர்களை, (நம் எதிரிகளை) மிலேச்சர்கள், நாகரிகம், பண்பாடு அற்றவர்கள் எனக்காட்ட சம்பவங்களுக்கா பஞ்சம்? வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளைக் கொள்ளையடிப்பது. வெளிநாட்டுப் பெண்களின் கற்பைப் பலாத்காரமாகப் பறிப்பது போன்ற செய்திகள் வெளிநாடுகளில் வெளிவரின் நிலைமை எப்படியெல்லாம் மாறும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

—(குருவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகராசா மீது பழி வாங்கப்படுகிறதா? அநீதியான இடமாற்றத்துக்கு ஆட்சேபம்!

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ் மாவட்ட அத்தியட்சகராகவும், பின்னர் கோண்டாவில் இ. போ. ச. டிப்போ நிர்வாகியாகவும் பதவி வகித்து பொது மக்களுக்கு சிரான பஸ் சேவையை அளிப்பதற்கு அரும்பாடு பட்டு வந்த திரு. எஸ். தியாகராசா அவர்கள் யூ. என். பி. ஆட்சியின் கீழ் திடீரென யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

திரு. தியாகராசாவின் இந்தத் திடீர் இடமாற்றத்தை அறிந்த யாழ் பஸ் பிரயாணிகளும், இ. போ. ச. ஊழியர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர். கடமையுணர்வும், திறமையும் நிறைந்த ஒரு பொறுப்பான அதிகாரியென்ற நன்மதிப்பை பெற்றுள்ள திரு. தியாகராசா யாழ்ப்பாண மக்களுக்கு திறமையான பஸ் சேவையை அளிப்பதில் அக்கறை கொண்டிருந்தார்.

திரு. தியாகராசா ஆகஸ்ட் கலவரம் குறித்து சன்சோனி ஆணைக்குழு முன் துணிகரமாகச் சாட்சியமளித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்,

திரு. தியாகராசா யாழ்ப்பாணத்திலிருந்து உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்று தேசிய பாதுகாப்புச் சபையிலும் வலியுறுத்தப்பட்டதாகவும், NATIONAL SECURITY COUNCIL என்று கூறப்படும் பாதுகாப்புச் சபையின் உத்தரவுப்படியே திரு. தியாகராசா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்தத் தேசிய பாதுகாப்புச் சபையில் பொலிஸ் மா அதிபர் திரு. அனு செனிவிரத்தினவும் அங்கம் வகிக்கிறாரென்பது தெரிந்ததே.

அநியாயமானதும் பழி வாங்கலுமான இந்த இடமாற்றம் திரும்பப் பெறப்பட வேண்டுமென்று வாதாடிவரும் திரு. தியாகராசா, அவ்வாறு திரும்பப் பெறப்படாத பட்சத்தில் வேலையிலிருந்து விலகவும் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. திரு. தியாகராசா பதவி விலகும் பட்சத்தில், ஒரு திறமையும், பொறுப்பும், கடமையுணர்வும் நிறைந்த அதிகாரியை இலங்கை போக்குவரத்துச் சபை இழந்து விடுமென்று சுட்டிக் காட்டப்படுகிறது.

தார்மீகம் பேசும் அரசு, தகுதியான ஒருவரின் சேவையை இழக்கப் போகிறதா அல்லது அவருக்கு நீதி வழங்கப் போகிறதா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

—1-ம் பக்க தொடர்

வேறு மாவட்டத் தலைநகர்களிலும் தமிழ் ஈழத் தலைவருக்கு பல்வேறு வரவேற்பு நிகழ்ச்சிகளை அளிப்பதற்கு தமிழ் நாட்டிலுள்ள தமிழீழ விடுதலைக்கு ஆதரவான இயக்கங்கள் ஏற்பாடு செய்துள்ளன. அத்துடன் தலைவர் வருகையையொட்டி, தமிழீழ விடுதலையை வலியுறுத்தும் சுவரொட்டிகளும் தமிழ் நாடெங்கும் ஒட்டப்பட்டு வருகின்றன. இதற்கு முன் எந்தவொரு ஈழத் தமிழர் தலைவருக்கும் அளிக்கப்படாத முறையில் இந்த வரவேற்பு எழுச்சியும், உணர்ச்சியும் நிறைந்ததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





திருப்திகரமான சலவைக்கு
மில்க்வைற் நீல சோப்
வாங்கி உபயோகியுங்கள்
விலை 60 சதம் மட்டுமே
மேலுறைகளை கவனித்து
வாங்குங்கள்.
மில்க்வைற்— யாழ்ப்பாணம்.



பரபரப்புடன்
இப்போது
விற்பனையாகிறது!
"த சன்சோனி
கொமிஷன்
எவிடென்ஸ்"
ஆங்கில வார
இதழ் விலை ரூபா
ஒன்று.



## கெப்பிட்டல்

5-வது வாரம்

மரிக்கார் ராமதாஸ், ஹெலன் குமாரி,
சிவராம், ராஜகோபால் நடித்த-

## ஏமாளிகள்

## கிங்ஸ்லி

(கொழும்பு)

சிவாஜி கணேசன் ஜெயலலிதா
சந்திரபாபு நடித்த-

## நீதி

[ புதிய பிரதி கலர் ]

## லிடோ (யாழ்நகர்)

## எங்கள் தங்க ராஜா

## விஜயா (மட்டுநகர்)

## அநுராகம்

## கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

6-வதுவாரம்

எம். ஜி. ஆர். — மாதுருதேவி
அஞ்சலிதேவி, பண்டரிபாய், நம்பியார்
- நடித்த -

## மர்மயோகி

(புதிய பிரதி)

## செல்லமகால்

எம். என்: சிவராம், எஸ். என். தனரட்ணம்
விஸ்வநாதராஜா, சந்திரகலா,
அஜேனா, மாஸ்டர் ஹைஜி, செல்வம்
பொஸ்கோ நடித்த -

## அநுராகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978 ம் ஆண்டு நவம்பர் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.